<u>4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு V. ஜான் மினோ, பி.ஏ. பி. எல்,** 4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை(பொறுப்பு) அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 168/2023**

**நாள்: 14.08.2024** **வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சதீஷ்குமார் | தொழில் | : விவசாயம் |
| த/பெ | : பொன்னுசாமி | கிராமம் | : வெங்கடேசா லேஅவுட் |
| வயது | : 44 | தாலுகா | : உடுமலைப்பேட்டை |
| ஜாதி | : | மாவட்டம் | : திருப்பூர். |
| சமயம் | : இந்து | | |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

பிரதிவாதியை அவரது மச்சான் ராஜேந்திரன் என்பவர் மூலம் தெரியும் எனது உறவினர் கதிரேசன் மூலமாகவும் பிரதிவாதியை தெரியும். பிரதிவாதியை ராஜேந்திரன் மற்றும் கதிரேசன் மூலம் எனக்கு தெரியும் என்பதை எனது நிரூபணவாக்குமூலத்திலோ வழக்குரையிலோ, அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியை எனக்கு 4-5 வருடங்களாக தெரியும். பிரதிவாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் விவசாயம் செய்து வருகிறார், ஏலச்சீட்டு நடத்திவருகிறார், ஆம்னிவேனில் மளிகை சாமான்களை விற்பனை செய்து வருகிறார். அந்த ஆம்னி வேனின் பதிவு எண் எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது என்றால் சுமார் 7 ஏக்கருக்கு மேல் உள்ளது. அந்த சொத்தின் நான்குமால் அளவுவிவரங்கள் எனக்கு தெரியாது. பிரதிவாதியின்விவசாய நிலத்திற்கு நான் சென்றுள்ளேனா என்றால் ஒரு முறை சென்றுள்ளேன். அந்த நிலத்தின் பட்டா எண் தெரியாது. பிரதிவாதியின் மனைவி பெயர் அருள்சக்தி. அவரது படிப்பு விவரம் எனக்கு

தெரியாது. பிரதிவாதிக்கு 2 மக்கள் உள்ளனர். பிரதிவாதியின் குடும்ப விவரங்கள் எனக்கு தெரியாது என்றும் பிரதிவாதியின் குடும்ப விவரங்கள் கதிரேசன் சொல்லிதான் தெரியும் என்றால் சரியல்ல. பிரதிவாதி குடியிருக்கும் தெரு பெயர் மற்றும் அவரது வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படியும் சாட்சியின் ஒப்புதலின்படியும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது,

ஒம்/-திரு.V.ஜான்மினோ,
4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி, (பொறுப்பு)
உடுமலைப்பேட்டை.